**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை**

**நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(13.07.2022 முதல் 17.07.2022)**

**அறிக்கை எண்: 55/2022** **தேதி: 12.07.2022**

## நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34 °செ முதல் 37 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ முதல் 28 °செ ஆகவும் பதிவானது.

## நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (13.07.2022 முதல் 17.07.2022)

| கடந்த வார வானிலை (08.07.2022 முதல் 11.07.2022) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (13.07.2022 முதல் 17.07.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 08/07 | நாள்-2 09/07 | நாள்-3 10/07 | நாள்-4 11/07 | தேதி | நாள்-1 13/07 | நாள்-2 14/07 | நாள்-3 15/07 | நாள்-4 16/07 | நாள்-5 17/07 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 3 | 0 | 0 | 3 | 5 |
| 36 | 37 | 34 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 33 | 34 | 34 | 34 | 34 |
| 27 | 28 | 25 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 27 | 27 | 27 | 27 |
| 7 | 7 | 7 | 8 | மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 4 | 4 | 4 | 6 |
| 64-54 | 64-54 | 66-63 | 74-63 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 75-65 | 75-65 | 75-65 | 75-65 | 75-65 |
| 9 | 11 | 11 | 10 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 14 | 14 | 14 | 14 | 14 |
| தென் மேற்கு | மேற்கு | தென் தென் கிழக்கு | தென் மேற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | மேற்கு |

## நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 13.07.2022, 16.07.2022 மற்றும் 17.07.2022 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33 °செ முதல் 34 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 65 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| நெல் | குறுவை குறுகியகால நெற்பயிரில், தூர் கட்டும் பருவத்தில் 1 ஏக்கருக்கு தழைச்சத்து உரமான 32 கிலோ யூரியாவையும் சாம்பல் சத்து உரமான 8.4 கிலோ முரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தினையும் கலந்து வயலில் சீராக தண்ணீர் வைத்து தூவவும். |

| | | |
|---|---|---|
| நெல் | | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த டைக்கோபால் 2.5 மி.லி. / லிட்டர் அல்லது பெனாஷாகுயின் 10 இ.சி 2 மிலி / லிட்டர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும். |
| பொது | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்படும் வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள் (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| கால்நடைகள் | ஆடு மற்றும் மாடு | பருவ மழை தொடங்குவதற்க்கு முன்னர் கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி அளிப்பதனை உறுதி செய்து கொள்ளவும். |

**குறுஞ்செய்தி**

பருவ மழை தொடங்குவதற்க்கு முன்னர் கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி அளிப்பதனை உறுதி செய்து கொள்ளவும்.

**இயக்குநர்**